தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies | ISSN(o): 3049-0723
[Impact Factor: 9.47] Monthly, Peer-Reviewed, Refereed, Indexed Journal with IC Value : 86.87
Volume - 1, Issue - 10, July - 2025

DOIs: https://doi.org/10.63300/tm0110.25 --:-- Research Paper

# Ecology in Purananuru

**Dr. E. Uvarani**
*Assistant Professor, Vel Tech Rangarajan Dr. Sagunthala R&D Institute of Science and Technology, Chennai-62.* druvaranie@veltech.edu.in

***Abstract:***

*This article discusses how the environmental awareness and thoughts observed in humans today were present among the ancient Tamils of the Sangam period, as reflected in Sangam literature. The people of the Sangam era were well aware of the changes occurring in nature and the changes brought about by human activities to nature. Furthermore, it can be understood from these texts that they possessed comprehensive knowledge encompassing forests, mountains, rainwater, the sky, the moon, and the five elements (Pancha Bhootas). While similar information is found in many Sangam literary works, this study specifically examines the environmental themes found in Purananuru.*

***Keywords****: Ecology, Purananooru.*

# புறநானூற்றில் சூழலியல்

**முனைவர் ஈ. யுவராணி**
**உதவிப் பேராசிரியர்,**
வேல் டெக் ரங்கராஜன் டாக்டர் சகுந்தலா ஆர் & டி அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம், சென்னை-62. Email: druvaranie@veltech.edu.in

**ஆய்வுச் சுருக்கம்**

இன்றைய காலகட்டத்தில் மனிதர்களிடம் காண்கின்ற சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வு மற்றும் சிந்தனைகள் சங்க இலக்கிய பழந்தமிழர்களிடம் இருந்துள்ளது என்பதைப் பற்றி இக்கட்டுரை எடுத்துரைக்கின்றன. சங்ககால மக்கள் இயற்கையில் ஏற்படுகின்ற மாற்றங்கள் மனிதர்களால் இயற்கைக்கு ஏற்படுகின்ற மாற்றங்கள் ஆகியவற்றை அறிந்தவர்களாக இருந்துள்ளனர். மேலும் காடுகள், மலைகள், மழைநீர், வானம், நிலா, பஞ்ச பூதங்கள் என அனைத்து வகையான அறிவினையும் ஒருசேர பெற்றுள்ளவற்றை இங்கு அறியலாம். சங்க இலகியங்கள் பலவற்றில இது போன்ற செய்திகள் இருப்பினும் புறநானூற்றில் காணப்படும் சூழலில் சார்ந்தசெய்திகள் மட்டும் இங்கு ஆராயப்பட்டுள்ளது.

**முன்னுரை**

உலக மொழிகளில் மிகச்சிறந்து விளங்கும் தமிழ்மொழியின் சிறப்புகளை எடுத்துரைப்பது சங்க இலக்கியங்களே. தமிழ் இலக்கிய வரலாற்றின்; மிகச் சிறந்த பொக்கிஷமாக திகழ்பவை தொல்காப்பியம் மற்றும் சங்க இலக்கியம் ஆகும். தொல்காப்பியம்

இலக்கணமாக அமைந்து வாழ்விற்கு வரையறை செய்கிறது. சங்க இலக்கியம் தமிழர் வாழ்ந்தவாழ்வின் வெளிப்பாடுகளை எடுத்துரைக்கிறது. தமிழ் மொழி, தமிழர் பண்பாடு, தமிழகம் மரபுநெறி, தமிழர்களின் பழக்கவழக்கங்கள் ஆகியவை பிரதிபலிக்கின்றது.

மனிதவாழ்க்கையும் இயற்கையும் ஒன்றோடொன்று இரண்டரக் கலந்துள்ளது. இயற்கையை மீறி மனிதன் வாழ்வதில்லை. “மனிதன் இயற்கையைச் சார்ந்து உயிர் வாழ்கிறான். அவன் தனது வாழ்க்கைத் தேவைகள் அனைத்தையும் இயற்கையிலிருந்து எடுத்துக் கொள்கிறான். இயற்கையை மனிதனின் அங்கம் என்று அறிஞர் மார்க்ஸ் விளக்குகிறார்”.(1)

சங்ககாலப் புலவர்கள் மேற்கூறிய கூற்றினை முழுமையாக உணர்ந்திருந்தனர் என்பதை அவர்தம் சங்கப் பாடல்கள் வாயிலாகப் அறிய முடிகிறது. சங்ககால மக்கள் இயற்கையைப் போற்றிப் பேணிப் பாதுகாத்தோடு அவற்றை பேணும் முறையினையும் அவற்றில் உள்ள அறிவியல் சிந்தனைகளையும் உலகிற்குக் கற்றுக் கொடுத்துள்ளவற்றை காண்கிறோம்.

**இயற்கை-விளக்கம்**

கடவுள் மனிதனுக்கு அளித்தமிகப் பெரிய பொக்கி~ம் இயற்கையாகும். இயற்கையின்று மனிதர்கள் வாழ இயலாது. இயற்கையின் விதம் பலவகையானது. காண்போர் கண்ணிலும் மனதிலும் நிலைத்து வாழக்கூடியது. இவ்வியற்கை பழந்தமிழ் இலக்கியங்களில் பரந்துகாணக் கிடக்கின்றன.

மதுரைத் தமிழ்ப் பேரகராதி இயற்கை என்ற சொல்லுக்கு சுபாவம், வழக்கம், இலக்கணம், நிலைமை, கொள்கை, முறைமை, ஏது, குணம், தகுதி, பாக்கியம், இயல்பு, செயற்கைக்கு எதிரானவை என்ற பல பொருள்களைத் தருகிறது.(2) பழந்தமிழர் வாழ்வில் இன்றியமையாததாக இயற்கை இருந்தமையை இவ்வரையறை வாயிலாக உணர்கின்றோம்.

மனிதர்கள் நீண்;டநாள் நலமோடு வாழ இயற்கையும் வாழும் நிலப்பண்பாடும் மிகவும் முக்கியமானதாகும். பண்டைத் தமிழரின் நிலம் பற்றிய பார்வை பரந்துபட்டதாக இருந்தது. முதற்பொருள், கருப்பொருள் என்று இருவகையாக நிலத்தைப் பாகுபடுத்தியுள்ளனர். நிலம் போன்று ஞாயிறு இயக்கம், கோள்களின் இயக்கம், மழை பற்றிய சிந்தனை, காற்று, அது இயங்கும் வான்வெளி குறித்த அவர்களின் பார்வைகளையும் வியப்பிற்குரியதாக உள்ளது.

**உலகம் - விளக்கம்**

நாம் வாழும் உலகிற்கு புவி, ஞாலம், பூமி எனப் பல்வேறு பெயர்கள் தமிழில் உள்ளன. உலகம் என்பது நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் ஆகிய ஐந்தையும் உள்ளடக்கியது.

நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின் (தொல்.பொருள்.1539)

என்னும் நூற்பாவின் வழி இப்பூமியானது ஐம்பெரும் பூதங்களையும் உள்ளடக்கியது என்று வலியுறுத்தியுள்ளதை அறிய முடிகிறது. இதனை அடியொற்றிச் சங்கப் புறநானூற்றுப் புலவர்,

இருமுந்நீர் குட்டமும்
வியல் ஞாலத்து அகலமும்
வளிவழங்கு திசையும்

வறிதுநிலை இயகாயமும் என்றாங்கு

அவை அளந்து அறியினும் (புறம்.20:1-5)

என்னும் பாடலடிகளில் அளக்க முடியா பகுதிகளாக கடல், காற்று, ஆகாயம் என்ற மூன்றினைக் குறிப்பிடுகிறார்.

உலகம் என்பது இவ்வைம் பெரும் பூதங்களால் ஆனது என்பதை மற்றொரு புலவர் தெளிவுற எடுத்தியம்புகிறார்.

மண்டிணிந்த நிலனும்

நிலனேந்திய விசும்பும்

விசும்புதைவரு உவளியும்

வளித் தலைஇய தீயும்

தீமுரணியநீரு மென்றாங்கு

ஐம்பெரும் பூதத்து இயற்கை போல (புறம்.2:1-6)

ஐம்பெரும்பூதம் என்பதை பஞ்சபூதம் என்கிறோம். இப்பாடலின் வழி நிலம், விசும்பு, வளி, தீ, நீர் ஆகியவற்றை புலவர் இங்கு குறிப்பிட்டுள்ளார். மண்ணின் திணிவே நிலம். நிலம் விசும்பை ஏந்திக் கொண்டுள்ளது. விசும்பை வளி தடவுகிறது. வளிக்காற்றில் தீ பொருந்தியுள்ளது. தீயோடு முரண்பட்டது நீர். நிலம் தாங்கும் ஆற்றல் கொண்டதாகவும் விசும்பு நிலத்தை வளைத்துக் கொண்டுள்ளதாகவும் காற்று வலிமையுடையதாகவும் நீர் கொடையாக வழங்கப்படும் பொருள் எனவும் புலவர் எடுத்தியம்பியுள்ளார்.

எனவே சங்ககால மக்கள் நிலம், நீர், ஆகாயம், காற்று, நெருப்பு ஆகியவற்றால் ஆனவை தான் உலகம் என்பதை உணர்ந்திருந்தனர் என்பதை அறியமுடிகிறது. இக்கால அறிவியல் அடிப்படையில் விசும்பில் நிலம் மிதக்கறிது. நிலத்தில் உள்ள வளி உயிரினங்களை வாழச் செய்யும். தீ விண்மீன்களின் மூச்சு. இதன் எதிரி நீர் என்று கூறுவது வியப்பானதல்ல. இதனை எந்த ஒரு விஞ்ஞான வளர்ச்சியும் இல்லாத காலகட்டத்தில் புலவர் பெருமக்கள் துல்லியாம அறிந்து வைத்திருந்ததே மிகச் சிறந்த வியப்பாகும்.

மேலும்,

"நிலம் நீர் வளி விசும்பு என்ற நான்கின்

அளப்பு அரியையே

நாள் கோள் திங்கள் ஞாயிறு கனை அழல்

ஐந்துஒருங்கு புணர்ந்த விளக்கத்து அனையை

போர் தலைமிகுத்தஈர்-ஐம்பதின்மரொடு"3

இப்பாடலில், நிலம், நீர், காற்று, விசும்பு ஆகிய நான்கினையும் போல உன் பெருமையை அளந்து காண்பதற்கு அரியவரன் ஆவார். நாள் மீன்களும், கோள் மீன்களும், திங்களும், ஞாயிறும், மிகுந்த நெருப்பும் ஆகிய ஐந்தும் ஒன்று சேர்ந்தால் பிறக்கும் பேரொளியைப் போன்றவன் ஆவான் என்று மன்னனை புகழ்ந்து பாடுவதாக அமைந்த பாடலின் வழி இந்த உலகம் நிலம், நீர், காற்று, விசும்பு, நெருப்பு ஆகியவை அந்த உலகில் மிகச் சிறந்தபொருள் என்பதால் அப்பொருளை மையமாகக் கொண்டு அம்மன்னரை சிறப்பித்துப் பாடப்பட்டுள்ளதை காணலாம்.

**சூழல் தூய்மை**

மனிதன் தான் வாழும் இருப்பிடத்தையும் சுற்றுப்புறத்தையும் தூய்மையாகப் பேணுகின்ற பொழுது ஆரோக்கியமான உலகிற்கு வழிவகுக்கிறது. அவ்வகையில் தம்மையும் தாம் வாழ்ந்த சூழலையும் அக்கறையுடன் சங்கத் தமிழர்கள் பேணிக்காத்துள்ளதை காணமுடிகிறது. அவற்றை இலக்கியங்களில் காணப்படும் குறிப்புகளில் மூலம் அறியமுடிகிறது.

உடலைப் பேணிக்காக்கும் உணவுப் பழக்கத்தினை மேற்கொண்டு இருந்தனர். அவ்வுணவைப் பாதுகாத்து உண்டனர் என்பதைச் சங்க இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன.

பழந்தமிழர் மேற்குறிப்பிட்டதை நன்குணர்ந்தவர்களாக விளங்கியுள்ளனர். பழந்தமிழர் உணவில் சைவ அசைவ உணவுகள் இரண்டும் கலந்து இருந்துள்ளன. குறிப்பாக, உணவினை வேகவைத்து உண்ணும் வழக்கம் இருந்தமை அறிகின்றோம்.

குப்பைக் கீரைகொய்க்கண் அகைத்த
முற்றா இளந்தளிர் கொய்துகொண்டு உப்பின்று
நீருலை அக ஏற்றிமோரின்று
அவிழ்பதம் மறந்துபாசடகு மிசைந்து
மாசொடு குறைந்த உடுக்கையள் (புறம்.159:9-13)

என்ற பாடலடிகளில் வேக வைக்கப்பட்டகீரை உணவாக உட்கொள்ளப்பட்டமை கூறப்படுகிறது. அக்காலமக்களின் தூய்மை பற்றிய விழிப்புணர்வாக இதனைக் கருதியுள்ளனர்.

மேலும்,

"உண்மின் கள்ளே அடுமின் சோறே
ஏறிகதிற்றி ஏற்றுமின் புழக்கே
வருநரக்கு வரையாது பொலங்கலந் தெளிர்ப்ப
இருள் வணர் ஒலிவரும் புரியஅவிழ் ஐம்பால்"4

மருத நிலமக்கள் செந்நெல் சோறும் மலைநிலமக்கள் வெண்ணெல் சோறும் உட்கொண்டனர். செந்நெல் சிறியமஞ்சள் நிறமுடைய தானிய மென்றும் வெண்ணெல் ஒருவகையான காட்டரிசி என்றும் கூறுவர். சோற்றைப் பலவகையில் பக்குவப்படுத்திச் சேரர்கள் உண்டதைப் பதிற்றுப்பத்து விளக்குகிறது. சோற்றிலே அவர்கள் நெய் விட்டுசமைத்தனர். இறைச்சி வகைகளையும் சோற்றோடு கலந்து சமைப்பது பழந்தமிழரின் மரபாகும். எனவே ஒவ்வொரு மனிதர்களும் தனக்கான உணவு முறைகளை தத்தம் நிலங்களுக்கு ஏற்ப உட்கொண்டு வாழ்ந்துள்ளனர். சமுதாயத்திற்கு எந்த ஒருபக்க விளைவுகளும் ஏற்படாவண்ணம் உணவு முறைகளை மேற்கொண்டுள்ளனர்.

**உணவுப் பாதுகாப்பு**

பருவ காலத்திற்கேற்ப உணவுகளைச் சேமிக்கும் பழக்கம் நிரம்பப் பெற்றிருந்தனர். சிறிய தாழ்வாரத்தினை உடைய குடிசையில் வாழும் குறவர்கள் வளைந்த மூங்கினுள் மதுவை வைத்து உண்ட செய்தியினை உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்,

குறியிறைக் குரம்பைக் குறவர் மாக்கள்
வாங்கமைப் பழுனியதேறன் மாந்தி(புறம்.129:1-2)

என்ற பாடலடிகளால் எடுத்தியம்புகிறார். இது போன்று அவ்வவ் நிலமக்கள் இத்தகைய உணவுப் பாதுகாப்பு முறையை அறிந்து இருந்தனர் என்பதை இலக்கியங்கள் வாயிலாக அறிகின்றோம்.

தனிமனிதத் தூய்மை,மனயகத் தூய்மை மற்றும் மக்கள் ஒன்று கூடும் மன்றத் தூய்மை குறித்தும் பழந்தமிழரிடையே போதுமான விழிப்புணர்வு இருந்தமை காண்கிறோம்.

இன்றைய விரைவு உணவால் பலவித வயிற்று கோளாறு வருவதை நாம் காணலம் ஆரோக்கிய இயற்கை உணவு வகைகளையே உண்டு மனிதவாழ்வு நீடிக்க வழிவகை செய்ய வேண்டும். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரைவிரைவு (குயளவ குழழன) க்கு அடிமையாகி கிடப்பது தெரிந்த உண்மையே சங்ககால உணவு உடல் நலம் காக்கும் உடல் உறுதிபெறும்.

மேற்கண்டவாறு சங்ககால உணவு முறைகள் உணவுபழக்கம், உணவு வகை இவையே சங்ககால உணவு முறையாகும்.

**காடுகள் உருவாக்கம்**

"காடுகள் இயற்கைப் பாரம்பரியத்தின் இனிமையான எச்சங்கள்; ஒருபக்தனுக்குப் புனிதமான கோயில் வளாகம்; அப்பூட்டும் நகர்ப்புறச் சூழலிலிருந்து விடுபட இளைப்பாற்றும் இயற்கைத் தலம் ஓங்கி வளர்ந்ததிட மரங்களின் காட்சிச் சாலைகள் அழிந்து வரும் தாவர, விலங்கினங்களுக்குக் காப்பகங்கள் வாழிடம் பிறழ்ந்தவற்றிற்குப் புகலிடங்கள் நீர்வளம் பேணும் நீர்ப்பிடிப்புப் பகுதிகள் மதிப்புமிக்க அரிய தாவர பரிசோதனைக் கூட்டங்கள்"(5)என்கிறார். சிவ.மங்கையர்க்கரசி. காடுகள் இயற்கையாக உருவாகக்கூடியவை. அவற்றில் இன்றியமையாத காரணம் விதைபரவல். இன்றையச் சுற்றுச்சுழல் ஆர்வலர்கள் தற்போது விதைபரவல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர். விலங்குகள், பறவைகள் எச்சம் மூலமாகவும் விதை பரவல் நிகழ்வதற்க இடமாகஉள்ளது.

குமிழ் உண் வெள்ளைபகுவாய் பெயர்த்த
வெண்காழ் தாயவண்காற் பந்தர் (புறம்-324 9,10)

என்னும் புறநானூற்றுப் பாடல் வரிகளில் குமிழம் பழங்களை உண்ட வெள்ளாடு தன் வாயினின்றும் துப்பிய விதைகள் எங்கும் பரவிக் காணப்பட்ட கருத்தினை, காடுகள் உருவாகக் காரணமான விதை பரலலுக்குச் சான்றாக கருதுவதற்கு இடமாக அமைந்துள்ளது.

**காடுகள் அழிவு**

பாரிபறம்புமலையைச் சிறப்பிக்கவந்தகபிலர்,
குறத்திமாட்டியவறல்கடைக் கொள்ளி
ஆரம் ஆதலின் அம்புகைஅயலது
சாரல் வேங்கைபூஞ்சினைத் தவழும் (புறம்.108:1-3)

என்ற வரும் பாடல் அடிகளால் சந்தனமரம் எரிக்கப்பட்டமையும் அதனால் எழுந்த புகை வேங்கை மரத்தில் படிதலையும் குறிக்கின்றார். அன்றாடத் தேவைகளுக்கு அரிய வகை சந்தன மரங்கள் அழிக்கப்பட்ட நிலையினைக் குறிப்பால் உணர்கின்றோம். மேலும்,

களிறே, எழுவந் தாங்கிய கதவம் மலைந்து (புறம்.97:8)

என்ற வரியால் கோட்டைக்கு அமைந்த பெருங்கதவுகளின் வலிமையை உணர்த்தும் செய்தியினால் கதவுகள் செய்ய மரங்கள் அழிக்கப்பட்டமை பெறப்படுகிறது. இது போன்று தேர்கள், வண்டிகள், அச்சுகள் போன்ற பல பொருட்கள் செய்வதற்கும் மரங்களே பழங்காலத்தில் பயன்படுத்தப்பட்டன. மக்களின் வாகனப் பயன்பாட்டிற்குத் தேர்கள் அதிகமாகப் பயன்பாட்டில் இருந்த குறிப்பினை,

வைகல் எண்தேர் செய்யும் தச்சன் (புறம்.87:3)

எனும் பாடலடி தருகிறது.

“காடு கை காய்த்தியநீடுநாள் இருக்கை”6

என்னும் பாடல் மூலம் விறகுக்காக மரங்கள் வெட்டி அழிக்கப்பட்ட செய்தியைக் கூறுகின்றன.

காடே கடவுள் மேனபுறுவே
ஒள்ளிழை மகளிரொடு மள்ளர்மேன
ஆறே அவ்வனைத்து அன்றியும் (பதிற்று-13:20-22)

இப்பாடலில், சங்ககால மன்னரகள் தம் ஆட்சித் திறனை மேம்படுத்த நாடுகளைச் சீரழைத்துள்ளனர். அச்சீரமைப்பு பணிகளுள் ஒன்று காடுகளை அழித்து நாடாக்குதல். இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன், தன் மக்களைப் புரந்த நாடுகளில் எல்லாம் பெருங்காடுகளை அழித்து நாடாக்கி வளப்படுத்தியதால் மக்கள் அங்கே வாழ்ந்து தமக்குரிய தெய்வங்களுக்கு கோவில்களை அமைத்தனர். சிறுகாடுகளெல்லாம் அவனது படைவீரர் தங்கும் இடங்களாயின. ஆறலைக் கள்வர்கள் திரியும் அடர்ந்த காடுகளும் அவ்வாறே ஆயின என்று புலவர் பாடியுள்ளார்.

இருப்பினும் சங்ககாலமக்கள் இயற்கையோடு ஒன்றிவாழ்ந்தனர். இயற்கை மீதான ஒரு புரிதலுணர்வுடன் அதனை உற்று நோக்கி அதன் போக்குடன் வாழத் தலைப்பட்டனர். இன்றையமனிதன் இயற்கையிடமிருந்து தன்னை விலக்கி வாழ்வதாலேயே பெரும் சூழல் அழிவுனைப் பெற்று வருகின்றனர். தன் வாழ்வைக் கட்டமைக்க இயற்கையின் கட்டமைப்பை அவன் உடைக்க முற்படுவது தான் இன்று எதிர் கொண்டு வருகின்ற சூழல் சீர்கேட்டிற்கான காரணம் என்றால் அவை மிகையாகாது.

இதனால் காடுகளை முற்றிலும் அழித்து சீர்கேடுகள் செய்ய முற்பட்டனர் சங்க மக்கள் என்று கூறமுடியாது. தங்களுக்கென்ற இருப்பிடத்தை உருவாக்கும் முயற்சியில் மட்டுமே அவர்கள் மரங்களை அழிக்க முற்பட்டுள்ளனர். தற்போது அத்தியாவசய தேவைகளுக்கான இருக்கின்ற கொஞ்ச நஞ்ச மரங்களைக் கூட அழித்து மரங்களே இல்லாத நகரமாக மாற்றி வருகின்றோம். தற்காலத்தில் புகைப் பிடிப்பவர்கள் அந்தப் புகையை சரிவர அணைக்காமல் கீழே போடுவதால் காடுகளின் அழிவு ஏற்படுகிறது. வுறளை நிலங்களைக் கூட அழித்து மாடமாளிகைகள் கட்டிசொகுசு வாழ்விற்கு நாட்டம் செலுத்துகின்றனர். இதனால் பலநிலைகளில் காடுகள் அழிக்கப்படுகிறது. மேலும் சங்ககால மக்கள் சந்தன மரங்கள் எறிப்பதால் ஏற்படும் புகைகள் காற்றை மாசுபடுத்துவனவாக இல்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. “இதுவரை உலகில் நடைபெற்ற எந்தவகையான போராட்டங்களும் காடுகள், காட்டுயிரிகளின் அழிவைத் தடுக்க முடியவில்லை. அவைமெல்ல அழிந்துதான் போகின்றன. கானகத்தை அழிப்பதும் வனங்களை ஒழிப்பதும் நமக்கு நாமே நஞ்சூட்டிக் கொள்வதற்குச் சமம் என்றுஎவரும் உணர்ந்தாரில்லை”(4)என்கிறார் இடைக்காடன் அவர்கள். சங்ககாலம் தொட்டே

காடுகளை அழிப்பதையும் சீர்கேட்டிற்கு வழிவகை செய்யும் நச்சுப்புகை பொருட்களையும் அன்றே புலவர்கள் அறிந்து அவை சூழல் கேட்டிற்கு வழிவகுக்கும் என்பதை வலியுறுத்தியுள்ளனர்.

**மழைநீர்**

தட்பவெப்பத்தின் சீரான நிலையினால் மழைநீர் பொழிகிறது. நிலத்தின் உயிர்கள் அனைத்தும் நன்மையடைகின்றன. பறவைகளின் பயணப்போக்கும் விலங்குகளின் இனப் பெருக்கமுறையும், தாவரங்களின் வளர்ச்சியும், மனிதனின் வளமான வாழ்வும், இதனையொட்டி அமைகின்றன. மழையைப் போற்றும் விதமாக சிலப்பதிகாரத்தின் இளங்கோவடிகள் 'மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும், நாமநீர் வேலியுலகிற்கு அவனளி போல்' எனப் பாடியுள்ளார். பதிற்றுப்பத்து பாடலில் மழையினால் பல்வகை உயிரினங்களும் மகிழ்வு எய்துகின்றன என்ற செய்தியை எடுத்துக்காட்டியுள்ளது.

"வானம் பொழுதொரு சுரப்பக் கானம்
தோடுறு மடமானேறு புணர்ந்தியலப்
புள்ளு நிமிறுமாச் சிணையார்ப்பப்
பழனங் கிழங்குமிசையிற வறியாது
பல்லான் என்பிரை புல்லருந் துகளப்
பயங்கடையறியா வளம்"7

பண்டைய காலத்துப் பருவ நிலைக் காலங்களில் காலம் தவறாது மழை பொழிந்து மக்களுக்கும், மாக்களுக்கும் நன்மை நல்கிய செயலை காலமாரி என்றும் காலம் தப்பி கேடு விளைவித்த செயலைவம்பமாரி என்றும் அழைக்கப்பட்டன என்பதை

மடவாழி மஞ்சைமாயினம்
காலமாரி பெய்தென ஆதெனதின்
ஆலறுமாலின பிடவும் பூத்தன (குறு: 251: 1-3)

என்றும்,

பருவம் வாராஅளவை நெரிதரக்
கொம்புசேர் கொடியிணர் ஊழ்த்த
வம்பமாரியை காரென மதித்தேதி(குறு: 66: 3-5)

என்றபாடல் வரிகளில் காணப்படுகிறது. அதே போன்று திருவள்ளுவர், மழை இல்லை எனில் கடலால் சூழப்பட்ட நில உலகம் பசியால் வாடும் என்கிறார்.

"விண்இன்றி பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உள்நின் றுடற்றும் பசி"(குறள்: 13)

திருக்குறளில் காணப்படும் வரிகளிலிருந்து மழையின் முக்கித்துவத்தை அறிந்தவர்களாகவே தமிழர்கள் இருந்துள்ளது தெளிவாக நமக்கு புலனாகின்றன.

**நிலா**

தமிழ் மக்கள் நிலவைப் பிறநாட்டார் போல் பகுத்தறிவிற்கு ஒவ்வாத வகையில் கருதவில்லை. அதன் இயற்கைத் தன்மையை நன்கு அறிந்திருந்தனர். எனவேதான், நிறைமதி,

தேய்மதி, வெள்ளுவா (பௌர்ணமி), காருவா (அமாவாசை), வளர்மதி, பிறைமதி, எட்டாம் நாள் திங்கள், மறுக்கொண்டமதி, அரவுவாய்மதி, வைகறைமதி, பக்கமதி, நிலவு, மீன்சூழ் மதி, குழவித் திங்கள், திங்கள் குழவி, மதி அரும்பு, என நிலவின் பல்வேறு தோற்றங்களைக் குறிப்பிட்டுள்ளனர். நிலவாகிய மதியை அடிப்படையாகக் கொண்டே மதி அல்லது திங்களின் பெயரில் மாதம் அல்லது திங்கள் எனக் காலத்தைப் பகுத்துள்ளனர். எனவே, திங்கள் சுற்றும் கால அளவை உணர்ந்த அறிவியல் தலைமக்களாக நம் முன்னோர் இருந்துள்ளனர். புறநானூற்றிலும் திங்களின் இயற்கை பற்றிய பாடல் இடம் பெற்றுள்ளது.

மூவைந்து - பதினைந்து - நாள்களில் முறைமுறையே வளர்வதும் தேய்வதுமாகிய முழு வெண்ணிலவைப் போல என உவமையாகப் புலவர் கோவூர் கிழார்

மாகவிசும்பின் வெண் திங்கள்
மூவைந்தான் முறைமுறைக்
கடல்நடுவண் கண்டன்ன (கோவூர் கிழார்: புறம் : 400 : 1-3)

என்னும் பாடல் அடிகள் மூலம், விளக்குகிறார்.

பிறப்பு, வளர்ச்சி, தாழ்ச்சி, இறப்பு முதலான உலகியல் நிலையாமை குறித்துத் திங்களின் வளர்வது, தேய்வது, மறைவது ஆகியவற்றுடன் ஒப்பிட்டுப் புலவர் கூறுகிறார்.

தேய்தலுண்மையும் பெருகலுண்மையும்
மாய்தலுண்மையும் பிறத்தலுண்மையும்
அறியாதோரையும் அறியக் காட்டி
திங்கட் புத்தேள் திரிதரும் உலகத்து

என்னும் பாடலடிகள் திங்களின் பல்வகைத் தோற்றம், தோற்றமின்மை குறித்து விளக்குகின்றன. மேலும், திங்களின் குளிர் தன்மையுடன் ஒப்பிட்டுப் பண்புகளை விளக்கும் பாடலடிகளும் உள்ளன.

இருள்நிலாக் கழிந்தபகல்செய் வைகறை (புறநானூறு 394.6)

எனக் கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார், நிலாமறைந்து பகல் வருவதை விளக்குகிறார்.

புலவர் திருத்தாமனார், நிலாமறையும் பொழுதில் வெள்ளி முளைப்பதை,

மதிநிலாக் கரப்பவெள்ளிஏர்தர, (புறநானூறு 398.1)

என விளக்குகிறார்.

ஆடுகொள் வென்றி அடுபோர் அண்ணல்
நாடுதலை அளிக்கும் ஒண்முகம் போலக்,
கோடுகூடுமதியம் முகிழ்நிலாவிளங்கும்
மையல் மாலை (புறநானூறு 67.2-5)

எனப் புலவர் பிசிராந்தையார், வெற்றிவாகை சூடும் மன்னனின் முகம்போல நிலாவிளங்குவதாக அதன் காட்சி பற்றிக் கூறுகின்றார்.

**புலவர் ஔவையார்**

திங்கள் நாள்நிறை மதியத்து அனையை (புறம் 102: 6-7)

எனத் துன்ப இருள் போக்கும் முழுநிலா போன்றவன் அதியமான் நெடுமான் அஞ்சிளனைப் போற்றுகையில், இருள்நீக்கும் நிலவின் தன்மையைக் குறிப்பிடுகின்றார்.

புலவர் பெருஞ்சித்திரனார் நிலவைக் காட்டிப் பிள்ளைகளுக்குச் சோறு ஊட்டும் பழக்கத்தைக் குறிப்பிடுகின்றார் (புறநானூறு 160.22) நிலா நிலா ஓடிவா என நிலவைக் காட்டிக் சோறு ஊட்டும் பழக்கம் பன்னெடுங்காலமாக இருப்பதை, நிலா பற்றிய ஈடுபாட்டைக் குழந்தை பருவத்தில் இருந்தே உருவாக்கி வந்துள்ளர் நம் தமிழர்கள் என்பதை இப்பாடல் மூலம் நாம் அறியலாம்.

**முடிவுரை**

மனிதகுல வாழ்க்கையின் பிரதிபலிப்பே இலக்கியங்கள். மனிதன் தன் வாழ்வியலை மட்டும் எண்ணாமல் இயற்கை சார்ந்த அறிவியலைப் பெற்றுள்ளான் என்பதையும் நம்மால் காணமுடிகிறது. உலக இயக்கங்கள், உலகத்தின் தோற்றம், காடுகள் குறித்த அறிவு, காடுகள் அழிவால் ஏற்படும் விளைவுகள், மழை பெய்வதற்கான காரணங்கள், மழை நீரால் உண்டாகும் நன்மைகள் என பல உலக நியதிகளை சங்க மக்கள் அன்றே தெரிந்து கொண்டு தன் வாழ்க்கையை வாழ்ந்துள்ளனர் எனபது மிகுந்த வியப்புக்குள்ளான செய்திகளே ஆகும். சங்ககால மக்கள் அறிவின் அடிப்படையில் சிறந்தவர்களாகவே இருந்துள்ளனர். சைகைமொழி, குறியீட்டுமொழி, வாய்மொழி என படிப்படியாக உயர்ந்து வந்த மக்கள் அறிவியல் அடிப்படையிலும் முன்னேற்றம் அடைந்து வந்துள்ளனர் என்றாலும் அவை மிகையானதல்ல. சங்கமக்கள்; இயற்கையோடு இணைந்த வாழ்க்கையையே வாழ்ந்துள்ளனர் என்பதை இக்கட்டுரை வாயிலாக அறிய முடிகிறது.

**தொகுப்புரை**

- சங்ககால மக்கள் இயற்கை குறித்த தெளிவினை பெற்றிருந்தலை அறிய முடிகிறது.
- உலகம் உருவான விதத்தையும், உலகம் இயக்கிவதற்கான காரணம் மற்றும் தேவைகளை மக்கள் உணர்ந்திருந்தனர் என்பது புலனாகிறது.
- காடுகளைஅழித்ததற்கானகாரணங்களைஅறியமுடிகிறது.
- உலகம் இயங்கும் காரணம் தெரிந்துள்ளமையாலும் நிலவைப் பற்றி அறிந்துள்ளமையாலும் அம்மக்கள் வானியல் சார்ந்த அறிவினைப் பெற்றுள்ளதை அறிய முடிகிறது.
- சுற்றுப்புறத் தூய்மை மற்றும் உணவு பாதுகாப்பு முறை குறித்த பார்வை பழந்தமிழிரிடையே இருந்துள்ளதை காணமுடிகிறது.
- மழை நீரின் அவசித்தை உணர்ந்துள்ளதை அறிய முடிகிறது.

**அடிக்குறிப்புகள்**


1. லாப்தேவ்,ஐ., பகுத்தறிவின் கிரஹம், ப.19.
2. மதுரைத் தமிழ்ப் பேரகராதி, தொகுதி-1, ப-252.
3. பதிற்றுப்பத்து, பேராசிரியர்.அ.மாணிக்கம், ப.36 (பதிற்-14-5)
4. மேலது. ப.71 (பதிற் -18:1.:6)
5. இடைக்காடன்,காட்டுயிர்-ஒன்றறைஆண்டுசிறப்பிதழ்,டிசம்பர்-2014, ப-86
6. பதிற்றுப்பத்து, பேராசிரியர்.அ.மாணிக்கம், ப.568 (பதிற்று– 82:9)
7. மேலது. ப.610 (பதி:89, 1-6)


## References:


1. Laptev, I., The Realm of Reason, p. 19.
2. Madurai Tamil Lexicon, Vol. 1, p. 252.
3. Patirruppattu, Prof. A. Manickam, p. 36 (Patir. 14:5)
4. Ibid., p. 71 (Patir. 18:1:6)
5. Idaikkadan, Kaattuyir (Wildlife) - One and a Half Year Special Issue, December-2014, p. 86.
6. Patirruppattu, Prof. A. Manickam, p. 568 (Patir. 82:9)
7. Ibid., p. 610 (Patir. 89, 1-6)



**Copyright (c) Author**

**This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.**

Our journal adopts CC BY License Creative Commons Attribution 4.0 International License http://Creativecommons.org//license/by/4.0/ . It allows using, reusing, distributing and reproducing of the original work with proper citation.